# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 20 செவ்வாய்க்கிழமை 04.03.2025 கதிர் 143







## சாணக்கியன், அர்ச்சுனாவால் சபையில் அமைதியின்மை

கொழும்பு, மார்ச் 04

மட்டக்களப்பில் இடம் பெறும் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பாக சபையில் கேள்வி எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் ஒலிவாங்கியை இடைநிறுத்தியதை அடுத்து சபையில் இன்று அமைதியின்மை ஏற்பட்டது.

கடந்த 20 ஆம் திகதி, மட்டக்களப்பு ஆரையம்பதி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தவர்கள் மீது, மர்மக் குழு ஒன்று வாள்களால் தாக்கியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

அதேபோல், நேற்று மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகிலுள்ள உணவகம் ஒன்றிற்கு முன்னால் நடந்த வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வின் போது, இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கருத்துத் தெரிவிக்க முயன்றபோது, சபாநாயகர் குறுக்கிட்டு, “இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல, எனவே சபை ஒத்திவைப்பு பிரேரணையின் போது இதனைக் கொண்டு 7➤



# தமிழரசை மலினப்படுத்த அனுமதியோம்; சித்தார்த்தனின் பூர்வீகம் தமிழரசுக் கட்சியே!



## சிவஞானம் இன்று தக்க பதிலடி

கொழும்பு, மார்ச் 04

“ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் கூட்டு வைக்க வேண்டிய தேவை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு இல்லை.” - என்று அந்தக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், 7➤

## ஏப்ரல் 4 ஆம் திகதி இலங்கை வருகின்றார் இந்தியப் பிரதமர்



கொழும்பு, மார்ச் 04

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஏப்ரல் 4 ஆம் திகதி கொழும்பு வரவுள்ள இந்தியப் பிரதமர், 6 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் .

கொழும்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய உட்பட்டோரைச் சந்திக்கவுள்ள இந்தியப் பிரதமர், சம்பூருக்குக் ஹெலியில் சென்று மின்திட்டம் ஒன்றை 7➤

## யாழ். கொக்குவிலில் வாள்வெட்டு! இளைஞரின் விரல் துண்டானது!!



யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ்ப்பாணம் - கொக்குவில் பகுதியில் உள்ள களஞ்சியசாலையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவரின் கை விரல் துண்டாக்கபட்டுள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 7➤

## பல்கலை ஊழியர்கள் போராட்டம்




யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று நண்பகல் 12 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பிரதான 7➤

## மதுபான விற்பனை நிலையத்துக்கு எதிராக நெடுந்தீவு மக்கள் போராட்டம்

நெடுந்தீவு, மார்ச் 04

மதுபான விற்பனை நிலையத்துக்கு எதிராக நெடுந்தீவில் மக்கள் இன்று செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாக இன்று காலையில் ஒன்றுதிரண்ட மக்கள் மதுபானசாலைக்கு எதிராகப் 7➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# சமூக விஞ்ஞானப் போட்டியில் சாதனை படைத்த இறக்காமம் அஸ்ரப் தேசிய பாடசாலை!





கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள இறக்காமம் ஊரில் உள்ள, இறக்காமம் அஸ்ரப் தேசிய பாடசாலை மாணவர்கள் சமூக விஞ்ஞானப் போட்டியில் சாதனை படைத்தது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

கடந்த ஆண்டு (2024) நடை பெற்ற அகில இலங்கை சமூக விஞ்ஞானப் போட்டியில் இறக்காமம் அஸ்ரப் தேசிய பாடசாலை மாணவர்கள் முறையே 3ஆம், 4ஆம் நிலைகளைக் பெற்று சாதனை பண்டைத்துள்ளனர்.

கடந்த ஆண்டு ( 2024) நடை பெற்ற இந்த போட்டியின் முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளது.

இந்த போட்டியானது கல்வி அமைச்சின் 2012ஃ20ஆம் சுற்று நிருபத்திற்கமைவாக மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பிரிவின் வழிநடாத்தலில் நாடு முழுவதும் பரவலான வகையில் தமிழ்,சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நடாத்தப்படுகினறமை குறிப்பிடத் தக்கதாகும்.

சமூக விஞ்ஞானப் பாடங்களான வரலாறு, குடியியல், புவியியல் போன்ற பாடங்களோடு இணைந்ததாக சமகாலத் தகவல்கள் தொடர்பாக ஆசிரியர்களையும், மாணவர்களினதும் ஈடுபாட்டை விருத்தியடையச்செய்யும் நோக்கில் நாடளாவிய ரீதியில் நடைபெற்ற இப்போட்டியில் இறக்காமம் அஸ்ரப் தேசிய பாடசாலை மாணவர்களான யு.று.பாத்திஃ, சு.ஆ.ஆயிஷா, ஆ.மு.ஆ.யூசுப்சயான் ஆகிய மாணவர்கள் வெற்றி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

## இலங்கை விமானப்படையின் புதிய தலைமைத் தளபதி நியமனம்!

இலங்கை விமானப்படையின் புதிய தலைமைத்தளபதியாக எயார்வைஸ்மார்ஷல் லசித சுமனவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நியமனம் இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித் துள்ளது

## இலங்கை போக்குவரத்து சபை ஓட்டுநர்களுக்கு எச்சரிக்கை!

இலங்கை போக்குவரத்து சபை ஓட்டுநர்கள் பருவச் சீட்டுகளை வைத்திருப்போர் மற்றும் பாடசாலை மாணவர்களை ஏற்றி செல்லாதது குறித்து போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் ஆலோசனைக் குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

இதன்போது விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் பிமல் ரத்நாயக்க, எந்தவொரு குடிமகனும் இந்த விடயத்தை 1958 என்ற எண்ணிற்கு அறிவிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினை தொடர்பில் தான் அறிந்துள்ளதாகவும், இவ்வாறான தவறான செயற்பாடுகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்ததோடு, இது தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபை ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# "மக்களுடைய நிலைமைகளை உணர்ந்து செயற்பட வேண்டும்"

கொழும்பு, மார்ச் 04

மின் சக்தி அமைச்சு எமது நாட்டின் முதுகெலும்பு என்பதுடன் முக்கியமான திணைக்களங்களை கொண்ட அமைச்சாகும். இந்த அமைச்சின் பணிகள் சிறப்பாக அமைய வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கிறோம். அதேபோல் நாட்டு மக்களின் நலனை கருத்திற்கொண்டு, நாட்டினுடைய பொருளாதார நிலையினை கருத்திற்கொண்டு இந்த அமைச்சு செயற்பட வேண்டிய தேவையிருக்கிறது. ஏனைய அமைச்சுக்களை போன்று வெறுமென வியாபார நிறுவனமாக செயற்படாமல் இந்த நாட்டு மக்களுடைய பொருளாதார நிலைமையை கருத்திற் கொண்டு அமைச்சு தனது பணிகளை மேற்கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற 2025 வரவு - செலவு திட்டத்தின் வலுச்சக்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான. குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த நாட்களாக ஒரு பெரிய எரிபொருள் பிரச்சினை நாட்டில் உருவாகியது. பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கிவந்த மூன்று வீத தரகுப்பணத்தை உடனடியாக நிறுத்திக்கொண்டதே இப்பிரச்சினைக்கு காரணமாகும். பெற்றோலிய கூட்டுத்தாபனம் மூன்று வீத தரகுப்பணத்தை விநியோகஸ்தர்களுக்கு நீண்டகாலமாக கொடுத்து வந்தது, அதிலேதான் அவர்களது மொத்த செலவீனங்களும் அடங்குகிறது என்பது விநியோகஸ்தர்கள் மூலம் அறியக்கிடைக்கிறது. இந்த 3 வீத தரகுப்பணத்தை சிபெட்கோ நிறுவனம் மாத்திரமல்லாது அமெரிக்கா, அவுஸ்ரேலியா நிறுவனங்களும் வழங்குகின்றன . எனவே இவ்வாறான நிலையில் பெற்றோலிய கூட்டுத்தாபனம் திடீரென இவ்வாறானதொரு முடிவு எடுத்தமை தவறான தீர்மானமாகும். அவர்களுடன் கலந்துரையாடி இது தொடர்பில் ஒரு தீர்மானத்திற்கு வந்திருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



அதேபோல், வணக்கஸ்தலங்களுக்கு கடந்த காலங்களில் சூரிய கலம் மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இன்னும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பள்ளிவாசல் மற்றும் தேவாலயங்களுக்கு வலுசக்தி அமைச்சு மூலம் இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. தற்போதைய சூழ்நிலைகளில் மதஸ்தலங்கள் நிதி நிலமைகளை மேற்கொள்ள பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின் சூழ்நிலை காணப்படுகிறது. இதனை கருத்திற கொண்டு மதஸ்தலங்களுக்கு சூரிய மின்கலம் ஊடாக மின் சக்தியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சூரிய கலம் மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும் அவரது உரையில் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)



## நீதிமன்ற துப்பாக்கிதாரி தொடர்பில் புதிய தகவல்

கொழும்பு, மார்ச் 04

பாதாள உலகக் கும்பல் தலைவர் கணேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட துப்பாக்கிதாரி, கடந்த ஆண்டு டிசம்பரில் கந்தானையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட துப்பாக்கிதாரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

டிசம்பர் 13, 2024 அன்று கந்தானையில் உள்ள ஒரு வீட்டில் சமிந்து தில்ஷான் பியுமாங்க கந்தானாராச்சி துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அப்பகுதியை விட்டு தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் வசிக்கும் ஒரு ஒழுங்கமைகப்பட்ட குற்றவாளியால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

90 நாள் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (ஊஊனு) சந்தேக நபரை விசாரித்த பின்னர் இந்த தகவல் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

27 வயதான சந்தேக நபர், பிப்ரவரி மாதம் கொழும்பு நீதிமன்றத்திற்குள் இருந்தபோது, ஒரு சட்டத்தரணி போல் மாறுவேடமிட்டு கணேமுல்ல சஞ்சீவ மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார் . (ஐ)

## இணைய பாதுகாப்பு சட்டம் விரைவில் திருத்தப்படும்

கொழும்பு, மார்ச் 04

2024 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இணைய பாதுகாப்புச் சட்டம், விரைவில் திருத்தப்படும் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதனை ஆராய்வதற்காக பாதுகாப்பு, ஊடகம் மற்றும் நீதி ஆகிய அமைச்சின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்காக மூன்று அமைச்சகங்களும் இணைந்து ஒரு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் கூறினார். அத்துடன், இதுவரை, இணைய பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் யாரும் கைது செய்யப்படவில்லை என்றும், தண்டிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார். (ஐ)



## பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்டார் ஜீவன்

கொழும்பு, மார்ச் 04

ஹட்டன் செனன் தோடத்தில் தீ விபத்துக்குள்ளான குடியிருப்புக்களையும், பாதிக்கப்பட்ட மக்களையும் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் இரவிலே சென்று பார்வையிட்டு தேவையான உதவிகளை மேற கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஹட்டன் செனன் தோட்டம், கே.எம். பிரிவு தோட்ட தொழிலாளரின் தொடர் குடியிருப்பு ஒன்றில் நேற்றிரவு தீப்பரபல் ஏற்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் கேள்வியுற்ற இ.தொ.கா பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் உடனடியாக பாதிக்கப்பட்ட பிரதேசத்திற்கு சென்றிருந்தார்.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து கலந்துரையாடியதுடன், தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடி தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக தெரிவித்திருந்தார். குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கான தங்குமிட வசதி, அத்தியாவசிய தேவைகள் உட்பட உலர் உணவுப் பொருட்கள் அனைத்தையும் வழங்குமாறு தோட்ட நிர்வாகத்திடம் கேட்டுக்கொண்டிருந்தார்.

எனவே இது தொடர்பில் குறித்த தோட்டப்பகுதிக்கான பெருந்தோட்ட யாக்கத்திடம் பேசி அனைத்து வசதிகளையும் செய்து தருவதாக தோட்ட நிர்வாகத்தினர் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அவர்களிடம் தெரிவித்தனர்.

மேலும் இந்த தீ விபத்து தொடர்பில் இன்று இடம்பெறவுள்ள நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலும், பாராளுமன்றததிலும் பேசி அவர்களுக்கான உரிய தீர்வினையும் பெற்றுத்தருவதாக தெரிவித்திருந்தார்.

இந்த தீ விபத்தினால் 24 வீடுகள் முற்றாக எரிந்து பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன், தீ விபத்தில் எவருக்கும் பாதிப்புக்கள் ஏதும் ஏற்படவில்லையெனவும் மின்கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கக்கூடும் எனவும் சந்தேகிக்கப்படுகிறது . (ஐ)

# தமிழகத்தை தீண்டத்தகாத மாநிலமாக பார்க்கின்றனர்

## மத்திய அரசு மீது ஸ்டாலின் குற்றச்சாட்டு

அரசியலாக மட்டுமல்ல, அக்கறையால் கூட தமிழகத்துக்கு எதையும் செய்து விடக்கூடாது என்று நினைக்கிறார்கள். அதற்கு காரணம் தமிழகத்தை அவர்கள் தீண்டத்தகாத மாநிலமாக பார்க்கிறார்கள்," என்று மத்திய பா.ஜ., அரசு மீது முதல்வர் ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.



அவரது கடிதம்: தி.மு.க., அரசின் கொள்கைகள் வேறு பா.ஜ.,வின் அரசியல் கொள்கை முற்றிலும் வேறு. அரசியல் ரீதியான கொள்கைகளில் மட்டும் முரண்பட்டால் பரவாயில்லை. அந்த அரசியல் நோக்கத்தை நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் வெள்ள நிவாரண நிதி தருவதில்லை. பள்ளி பிள்ளைகள், ஆசிரியர் நலன்களுக்கான நிதி தருவதில்லை. மெட்ரோ இரண்டாம் கட்ட பணிகளுக்கு நிதி தருவது இல்லை. பத்தாண்டுகளாக எய்ம்ஸ் மருத்துவமனையை கட்டுவதில்லை என்று சொன்னால் என்ன பொருள்?

தமிழகத்துக்கு எதுவும் கிடைத்து விடக்கூடாது எதுவும் தந்துவிடக் கூடாது என்று சதிச் செயலை பா.ஜ., செய்கிறது. அரசியலாக மட்டுமல்ல அக்கறையால் கூட தமிழகத்துக்கு எதையும் செய்து விடக்கூடாது என்று நினைக்கிறார்கள். அதற்குக் காரணம் தமிழகத்தை அவர்கள் தீண்டத்தகாத மாநிலமாக பார்க்கிறார்கள். தமிழகத்துக்கு உதவினால் தமிழகம் வளர்ந்துவிடும் என்பது ஒரு பக்கம், தமிழகத்தை பார்த்து மற்ற மாநிலங்களும் வளர்ந்து விடும் என்று பயப்படுகிறார்கள்.

**Google Translate- Chat GPT- Artificial Intelligence** போன்ற தொழில்நுட்பங்கள் மொழி சிக்கல்களை மனிதர்கள் எளிதாகக் கடப்பதற்கு உதவுகின்றன. அச்சிடப்பட்ட காகிதத்தைப் படம் எடுத்து, அதை இன்றுள்ள தொழில்நுட்பத்தில் எழுத்துருக்களாக மாற்றி, நாம் எளிதில் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஒரு மொழியில் உள்ள ஒலிப்பதிவை மற்றொரு மொழியில் மாற்றம் செய்து கொள்ளும் வசதிகளும் உருவாகிவிட்டன. ஒவ்வொரு மொழிக்கும் தேவையான தொழில்நுட்பத்தைக் கற்றுக்கொள்வது தான் மாணவர்களின் எதிர்காலத்திற்கு மிகுந்த பயனளிக்கும்.

அதற்குப் பதிலாக, ஒவ்வொரு மொழியையும் மாணவர்களிடம் திணிக்க முயற்சிப்பது அவர்களுக்கு சுமையாகவே அமையும். அறிவியலைப் புறக்கணிக்கும் கட்சியான பா.ஜ.,வும் அதன் நிர்வாகிகளும், மொழித் திணிப்பைக் கட்டாயமாக்குகிறார்கள். ஒருவர் விரும்புகிற எந்த மொழிக்கும் நாங்கள் எதிரிகளல்ல. எந்த மொழியையும் எங்கள் மீது திணிக்காதீர்கள் என்பதைத்தான் அன்று முதல் இன்று வரை தெளிவாகச் சொல்கிறோம்.

சிறுபான்மை சமுதாய மக்களுக்கான உருது மொழியும், அண்டை மாநிலங்களில் பேசப்படும் தெலுங்கு, கன்னட மொழிகளும் நம்முடைய கல்விக் கொள்கையின்படி இங்குள்ள சிறுபான்மை மொழிப் பள்ளிகளில் கற்றுத் தரப்படுகின்றன. இந்த மொழிகள் எதுவும் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துக் கூடியதல்ல.

ஆனால், பா.ஜ.,வின் நோக்கமே தமிழகத்தில் ஆதிக்க ஹிந்தியையும் சமஸ்கிருதத்தையும் கட்டாயமாகத் திணிக்க வேண்டும் என்பதுதான். அதனால்தான் ஹிந்தி படிக்க தமிழகத்தில் உள்ள மாணவர்களுக்கு ஏன் வாய்ப்பு ஏற்படுத்தித் தரவில்லை என்று கரிசனம் வழிவதுபோல கேட்கிறார்கள்.

தமிழக அரசின் பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் ஆயிரக்கணக்கான தனியார் பள்ளிகள் எதிலும் மும்மொழித் திட்டம் கிடையாது. ஹிந்தி மொழி என்பது கட்டாயமுமில்லை. அந்த மொழியில் தேர்வு நடத்தப்படுவதுமில்லை. இந்தியாவின் தென்மாநிலங்களில் உள்ளவர்கள் ஹிந்தி மொழியைக் கற்பதும், வட மாநிலத்தவர்கள் தென்னிந்திய மொழிகளில் ஒன்றைக் கற்பதும் தேச ஒற்றுமைக்கு வழிவகுக்குமென காந்தியடிகள் நம்பினார்.

வள்ளுவர் சிலையை கங்கை கரையில் நிறுவுவதாக சொல்லி குப்பை மேட்டில் போட்டவர்களா தமிழ் கற்றுத் தருவதற்கான அமைப்பை நிறுவப் போகிறார்கள்? கோட்சே வழியைப் பின்பற்றும் இயக்கத்தினர் காந்தியின் நோக்கத்தை ஒரு போதும் நிறைவேற்ற மாட்டார்கள். சென்னை மாகாணம் என்ற பெயர் இருந்த காலத்திலேயே 'தமிழ்நாடு காங்கிரஸ்' என்று பெயர் வைக்கச் செய்தவர் காந்தியடிகள்.

தமிழகத்தில் தற்போது ஓடும் ரயில்களுக்கு கூட ஹிந்தி-சமஸ்கிருதப் பெயர்களை வைப்பவர்கள் மத்திய பா.ஜ., ஆட்சியாளர்கள். தமிழையும் பிற மொழிகளையும் அழிப்பதுதான் அவர்களின் ரகசியத் திட்டம். அதை வெளிப்படையாக எதிர்க்கும் வலிமை கொண்டதுதான் தி.மு.க.,. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். (ஐ)



## தரிசன டிக்கெட் இருந்தால் மட்டும் திருப்பதி தேவஸ்தான அறைகளில் தங்க அனுமதி!

தரிசன டிக்கெட் இருந்தால் தான் திருப்பதி தேவஸ்தான அறைகளில் தங்க அனுமதி அளிக்கப்படும் என்று தேவஸ்தானம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

திருமலையில் சாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்களின் வசதிக்காக மட்டும் 7500 தங்கும் அறைகள் உள்ளன. பல பிரிவுகளாக இந்த அறைகள் பிரிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால் இடைத்தரகர்கள் மூலம் அறைகள் ஒதுக்கப்பட்டு மோசடிகள் நடைபெறுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இந்நிலையில், மோசடிகளை தடுக்க திருப்பதி தேவஸ்தானம் புதிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இனி வரும் காலங்களில் அறைகள் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் ஆதார் அட்டையுடன், தரிசன டிக்கெட்டுகளும் கட்டாயம் ஆக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து தேவஸ்தான அதிகாரிகள் கூறுகையில், ' இந்த நடைமுறை மூலம், தரிசனம் முடிந்த பின்னர் பக்தர்கள் உடனடியாக அறைகளை காலி செய்ய முடியும்.

அதன் பின்னர் மற்ற பக்தர்களுக்கு அறைகள் ஒதுக்கப்படும். தேவஸ்தானத்தில் இந்த நடவடிக்கை மூலம், கூடுதல் வருமானமும் ஈட்டப்படும்' என்று கூறினர். (ஐ)

## வைகுண்டர் கருத்துகளைப் பின்பற்றி ஏற்றத்தாழ்வற்ற அமைதியான சமுதாயத்தை உருவாக்குவோம் அண்ணாமலை

அய்யா வைகுண்டர் கருத்துகளைப் பின்பற்றி ஏற்றத்தாழ்வற்ற அமைதியான சமுதாயத்தை உருவாக்குவோம் என்று தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலை கூறி உள்ளார்.



ஒடுக்கப்படும் மக்களைக் காப்பதும், எளியவர்களுக்கு உதவிகள் செய்வதுமே தர்மம் என்று அன்பு நெறிகளை போதித்து, ஜாதி, மத வேறுபாடின்றி அனைவருக்கும் பொதுவானவராக இருக்கும் அய்யா வைகுண்டர் அவர்களின் 193வது அவதார தினத்தைக் கொண்டாடும் உலகளாவிய பக்தர்கள் அனைவருக்கும், தமிழக பா.ஜ., சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடவுள் ஒவ்வொருவரிடமும் இருக்கிறார் என்ற ஞானத்தைப் போதித்து, சமூக ஏற்றத்தாழ்வுகளை விலக்கி, ஆண் பெண் அனைவரும் சமம் என, சமத்துவத்தையும் சமாதானத்தையும் விதைத்தவர்.

விருதுநகருக்கு விடுமுறை் அண்ணாமலை வலியுறுத்தல்

உடல் தூய்மையையும், உள்ளத் தூய்மையையும் வலியுறுத்தி, மக்களிடம் சமத்துவம், சமூகநீதி, சுயமரியாதை, அச்சமின்மை, தர்மம் போன்ற அறநெறிகளை வளர்த்தவர் அய்யா வைகுண்டர்.

அதிகாரத்துவம், சமூக ஏற்றத்தாழ்வு, கொலை, கொள்ளை, பெண்கள், குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ள இன்றைய காலத்தில், அய்யா வைகுண்டர் அவர்களின் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்வது முக்கியமானதாக இருக்கிறது.

அய்யா வைகுண்டர் அவதார தினமான இன்று, அவரின் கருத்துகளைப் பின்பற்றி, அவர் காண விரும்பிய, ஏற்றத்தாழ்வற்ற, அமைதியான சமுதாயத்தை உருவாக்குவோம் என்று உறுதியேற்போம். அய்யா உண்டு! இவ்வாறு அவர் கூறி உள்ளார். (ஐ)

## மெட்ரோ ரயில் தினசரி பயணிகள் எண்ணிக்கை 5 லட்சமாக குறைவு

பெங்களூரில் போக்குவரத்து நெரிசல் என்ற, மிகப்பெரிய பிரச்னையை சமாளிக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்டது மெட்ரோ ரயில் சேவை. மைசூரின் ரோட்டின் செல்லகட்டாவில் இருந்து ஒயிட்பீல்டு வரை ஒரு வழித்தடத்திலும் துமகூரு சாலையில் உள்ள மாதவாரா முதல் கனகபுரா சாலையில் உள்ள சில்க் இன்ஸ்டிடியூட் இடையிலும், மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த இரண்டு பாதைக்கும் இன்டர்சேஞ்ச் ஆக, மெஜஸ்டிக் மெட்ரோ ரயில் நிலையம் உள்ளது. போக்குவரத்து நெரிசலில் சிக்கி வாகனங்களில் பயணம் செய்வோருக்கு, மெட்ரோ ரயில் சேவை வரப்பிரசாதமாக இருந்தது. மெட்ரோ ரயிலில் தினமும் 8 லட்சம் பேர் முதல் 8.20 லட்சம் பேர் பயணம் செய்து வந்தனர். இந்நிலையில் கடந்த மாதம் 9ம் தேதி, மெட்ரோ நிர்வாகம் டிக்கெட் கட்டணத்தை உயர்த்தியது. குறைந்தபட்ச கட்டணம் 10 ரூபாய் என்றும், அதிகபட்சம் 90 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது. இதற்கு பயணியர் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. ஆனாலும் டிக்கெட் கட்டணத்தை குறைக்க, மெட்ரோ நிர்வாகம் முன்வரவில்லை. இதையடுத்து மெட்ரோ ரயிலில் பயணம் செய்வோர் எண்ணிக்கை படிப்படியாக குறைய ஆரம்பித்தது. தற்போது தினசரி பயணியர் எண்ணிக்கை, எட்டு லட்சத்தில் இருந்து ஐந்து லட்சமாக குறைந்து உள்ளது. கடந்த மாதம் 10, 24 ஆகிய திகதிகளில் மட்டும் எட்டு லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். மற்ற நாட்களில் ஏழு லட்சம், ஆறு லட்சம் என குறைந்து வந்தது.

கட்டணத்தை குறைக்காவிட்டால் வரும் நாட்களில், பயணியர் எண்ணிக்கை மேலும் குறையும் வாய்ப்பு உள்ளதாக கருதப்படுகிறது. (ஐ)

# காலத்தை எதிர்த்து கரையேறி வந்தவள்!

திருநெல்வேலி மாவட்டத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தை அடுத்து இருந்த செங்கோட்டை என்னும் கிராமத்துக்குத் திருவிசை நல்லூர் ஸ்ரீதர வெங்கடேச ஐயாவாள் என்னும் மகான் வருகின்றார். வீதிகள் தோறும் தோரணங்கள் வீடுகள் தோறும் ஆண்களும் பெண்களும் குழந்தைதகளுமாகப் பூரண கும்பத்துடன் அவரை வரவேற்கக் காத்திருக்கின்றனர். ஒரு வீடு மட்டும் கோலம், கும்பம் என்று எதுவும் இன்றி பாழடைந்து கிடக்கின்றது. உள்ளிருந்து ஒரு விசும்பல் ஒலியும் கேட்கிறது.

மகான் அங்கே சற்று நிற்கின்றார். உள்ளே இருந்து “என்னை விடுங்கள் நான் போகத்தான் வேண்டும்” என்று அலறியபடி ஒரு பதினாறு வயதான பருவப் பெண் ஓடி வருகிறார். வந்தவர் மகானின் காலில் விழுந்து வணங்குகின்றார். மகான் அவர் தலையை வருடி “குழந்தாய் வருந்தாதே ஆண்டவன் இருக்கிறார்” என்கின்றார். அண்டை அயல் வீட்டாரின் முகம் மாறுபடுகின்றன. மகான் அவர்களது பார்வையில் மட்டமானவராகத் தெரிகின்றார். அவர்கள் மகானைத் தரிசனம் செய்வதை விட்டு வீட்டுக்குள் சென்று கதவை அடைத்துக் கொள்கின்றனர். அந்த மகானுக்கு மரியாதை அவ்வளவே ஆனது. காரணம் காலில் விழுந்து வணங்கியவள் ஒரு விதவைப் பெண்.

இந்த நூற்றாண்டுக்கு முந்தைய காலம் பெண்களைப் பொறுத்தவரை மிகவும் கொடுமையான காலம். அஃறிணை உயிர்களைப் போலப் பெண்களை நினைத்த காலம் அது. இப்போதும் அந்தப் பார்வை முற்றிலும் மாறிவிட்டது என்று கூற முடியாது. ஆனால் அப்போதைக்கு இப்போது சற்று மாறியுள்ளது என்று சொல்லலாம். அக்காலத்தில் பெண்களை ஒரு ஜடப் பொருளாகவே மதித்துள்ளனர். பெண்களின் மன உணர்வுகளுக்குக் கிஞ்சித்தும் மதிப்பு கொடுத்ததில்லை. குறிப்பாக இளமை மணமும் கைம்பெண் கொடுமையும் வேரும் விழுதுமாக அழுத்தமாகக் காலூன்றி இருந்தன.

இந்த நூற்றாண்டுக்கு முந்தைய காலம் பெண்களைப் பொறுத்தவரை மிகவும் கொடுமையான காலம். அஃறிணை உயிர்களைப் போலப் பெண்களை நினைத்த காலம் அது. இப்போதும் அந்தப் பார்வை முற்றிலும் மாறிவிட்டது என்று கூற முடியாது. ஆனால் அப்போதைக்கு இப்போது சற்று மாறியுள்ளது என்று சொல்லலாம். அக்காலத்தில் பெண்களை ஒரு ஜடப் பொருளாகவே மதித்துள்ளனர். பெண்களின் மன உணர்வுகளுக்குக் கிஞ்சித்தும் மதிப்பு கொடுத்ததில்லை. குறிப்பாக இளமை மணமும் கைம்பெண் கொடுமையும் வேரும் விழுதுமாக அழுத்தமாகக் காலூன்றி இருந்தன.

“மாலையிட்ட மணவாளன் இறந்து விட்டால்
மங்கை நல்லாள் என்ன செய்வாள்? அவளை நீங்கள்
ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம்
அணுவளவும் அடையாமல் சாகச் செய்தீர்!”


என்று புரட்சிக் கவிஞர் கைம்பெண்களுக்காக இரங்கிய காலம் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதுகள். அப்போது வரை கைம்பெண் கொடுமை முழுமையாக இருந்தது என்றே கூறலாம். முப்பதுகளில் இப்படி என்றால் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்திருக்கும்?

சமுகம் மட்டுமல்ல சமுகத்திற்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டிய சூழலில் தாம் பெற்ற பெண்ணுக்குப் பெற்றோர்களே கொடுமை இழைக்கும் எதிரிகளாக இருந்துள்ளனர். இளமை மணம், வயது பொருத்தப்பாடின்றி இளம்பெண்ணை முதியவருக்கு மணம் செய்தல், கணவன் வீட்டுக்குச் செல்லும் முன்பே கணவன் இறந்து விட்டால் அவளை விதவையாக்கி வெறுப்பு உமிழ்ந்து உணவும் உணர்வும் இல்லாத செத்த வாழ்வு வாழ வைத்தல் என்று பல கொடுமைகள்.

அப்படி இளமை மணம் செய்து கணவன் வீட்டுக்குச் செல்லும் முன்பே விதவையாகிப் பல கொடுமைகளை அனுபவித்து, தன் நியாயமான உணர்வுக்கும் மதிப்பளிக்காது கொடுமை இழைத்த பெற்றோரை விட்டு வெளியில் வந்து ஏக போகமாக எல்லோரிடமும் ஏச்சையும் பேச்சையும் அனுபவித்து, முடிவில் பலர் போற்றும் படியாகத் தன்னை நிலைநிறுத்தியவள் செங்கோட்டை ஆவுடையக்காள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தை அடுத்து இருந்த செங்கோட்டை என்னும் கிராமத்தில் பிறந்தவர் ஆவுடை அக்காள். இளமைத்திருமணம், பதினாறாவது வயதில் கணவனை இழந்தாள். கைம்பெண் ஆனாள். கணவனை இழந்தவளுக்கு அழகு எதற்கு? ஆடை ஆபரணம் எதற்கு? கல்வி எதற்கு? கலை எதற்கு? என்று அத்தனையிலும் ஆர்வமாய் இருந்த அப்பெண்ணைப் பருவத்திற்கு வந்தவுடன் அக்கால வழக்கப்படி மொட்டை அடித்து மூலையில் அடைத்தனர். உடைந்து அழுதாள். அழுதே கிடந்தாள் அந்த நாள் வரும் வரை. ஆம் அந்த ஸ்ரீதர வெங்கடேச ஐயாவாள் அவர்களை அவள் சந்திக்கும் வரை. ஒரு விதவை மகானைப் பார்ப்பதாவது? வணங்குவதாவது என்று ஊரும் உறவும் தூற்ற அப்பெண் ஒருவரும் அறியாமல் வீட்டை விட்டு ஓடி வந்து ஆற்றங்கரையோரம் அமர்ந்திருந்த ஸ்ரீதர வெங்கடேச ஐயாவாளிடம் வந்து சேர்ந்தாள். ஞான தீக்கை பெற்றாள்.

ஊர் என்னென்னவோ பேசியது. நாட்டாமை வசனம் போல அன்னம் நீர் புழங்கக்கூடாது என்று சொல்லி அவளைச்சாதியை விட்டுத் தள்ளி வைத்தது. ஆத்ம ஞானம் பெற்ற அவர் எதையும் பொருட்படுத்தாமல் எண்ணற்ற பக்திப்பாடல்களையும் யோகப் பாடல்களையும் ஞானப் பாடல்களையும் வேதாந்த சமரசப் பாடல்களையும் எழுதிக் குவித்தார். எழுதியதோடா? பலருக்கும் ஞானம் வழங்கும் ஞானாசிரியளாக விளங்கினாள்.



அக்காலத்து இளம்விதவைகள் அக்காளின் பாடல்களைப் பாடியே தம்மை ஆற்றுப் படுத்திக்கொண்டனர் என்பர். தம் ஞான குருவான ஸ்ரீதர வெங்கடேச ஐயாவாளின் மரணத்தின் போது பிலாக்கணமாக அவர் எழுதிய பாடல் அத்வைத பரமான அனுபவ ரத்ன மாலை முதலாகப் பண்டிதக் கவி, அத்வைத மெய்ஞான ஆண்டி, வேதாந்த அம்மானை, வேதாந்த ஆச்சே போச்சே, வேதாந்த சார பிரத்தியோத்திரக் கும்மி, மெய் பொய் விளக்கம், சூடலைக் கதை, சூடலைக் கும்மி, வேதாந்தக் கும்மி, கோலாட்டப் பாட்டு, வேதாந்த ஞானரசக் கப்பல், குரு, கிளிக்கண்ணி, குயில் கண்ணி, பராபரக்கண்ணி, பிரம்மம் ஏகம், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி படலம் அத்வைத ஏலேலோ, வேதாந்த பள்ளு, வேதாந்த நொண்டிச் சிந்து, ஞானக்குறவஞ்சி நாடகம், வாலாம்பிகை பந்து, ஸ்ரீ வித்தை சோபனம், அனுபோக ரத்னமாலை, வேதாந்த வண்டு, பிரம்ம ஸ்வரூபம், அத்வைத தாலாட்டு, தொட்டில் பாட்டு ஊஞ்சல், என்று எண்ணற்றப் பாடல்களை எழுதினார். அக்காள் கீதைக்கு விளக்கம் எழுதியுள்ளார். அக்காளின் பாட்டுத்திறத்திற்குச் சான்று ஒன்று. இறைக்காதலைப் பாடிய அக்காளின் சிங்கார ரசம் இதோ.

“ஆசையானேன் வெங்கடேச ஸ்வாமி மேலாசை ஆனேனே
அகமுருகுதடி பெண்ணே, மோகம் பெருகுதடி, ஒருவகையாக வருகுதடி தேகஸாக்ஷியானவன் சரசம்
அனேகமாமதை என்ன சொல்வேனடி போகபோக்ய சாதன
சித்கனபோதமாகிய ரதிவிலாஸன்மேல் (ஆசை)
அடுத்தநாயகன் வந்துஎன்னை பிடித்தநாள் முதலாய் மானம்
கெடுத்த கலவியிலே மனம் பிடித்தமாகுதடி
படுத்தவுடனிது கடுத்துக்கொண்டு உடுத்த துகில் தன்னை விடுத்து அடுத்தவேளையி லானந்தாமிருதம் குடித்து (ஆசை)”,

இப்படி இறைக் காதலை மட்டுமா எழுதிக் குவித்தார் அக்காள்? புரட்சிகரமான எத்தனையோ கருத்துகள் அவர் பாடல்களில் காணப்படுகின்றன. எச்சில் பற்றிய அக்காளின் பார்வை.

“எச்சிலெச்சில் என்று புலம்புகிறாய் மானுடர்கள்
எச்சில் இல்லாத இடமில்லை- பராபரமே
சில்லெச்சில் மூர்த்தி கையில் ஈ எச்சில் தேனல்லவோ
என்றைக்கும் உண்ணும் தாய் முலை எச்சிலன்றோ- பராபரமே”
மச்சமெச்சில் நீரில் வந்து மூழ்கும் மறையோர்கள் எச்சில்
பச்சைக் கிளி கோதும் பழம் எச்சில் அன்றோ- பராபரமே
தேரை எச்சில் தேங்காய் சிறு பூனை எச்சில்
தேசமெல்லாமே எச்சிலென்றறிவேன் - பராபரமே
எச்சிலுன் வாயும் உடலும் ஏகமாயிருக்கையிலே
பாதம் எச்சிலென்று அலம்ப சுத்தமாச்சோ- பராபரமே

இப்பாடலுக்கு ஒரு செவி வழிச் செய்தியும் காணப்படுகிறது. ஆற்றில் ஒரு மாங்குச்சி மிதந்து வருகிறது. அதை எடுத்து வாயில் வைத்துக் கொள்கின்றார் அக்காள். அதைப் பார்த்த தோழிகள் சீ பல் தேய்த்து வீசிய எச்சில் குச்சியை எடுத்து வாயில் வைக்கிறாயே என்று கேலி பேசுகின்றனர். அப்போது அக்காள் எச்சில் பற்றிப் பாடிய பாடலாக இப்பாடலைச் சொல்வார்கள்.

இப்பாடலைப் பற்றி மற்றொரு செவி வழிக் கதையும் உண்டு. தம் ஞான குருவாகிய ஸ்ரீதர வெங்கடேச ஐயாவாள் ஆற்றில் பல் தேய்த்துக் கொண்டிருக்கும் போது அக்காள் சென்றதாகவும் அவர் வீசிய எச்சில் மாங்குச்சியை எடுத்து அக்காள் வாயில் வைத்ததாகவும் அதனைக் கண்ட பாகவதர் ஒருவர் இப்படி ஒருவர் உமிழ்ந்த எச்சிலை எடுத்துண்பது அழகோ? இது என்ன விபரீதம் என்று கேட்டதாகவும் அப்போது அக்காள் பாடிய பாடல் இது என்றும் கூறுவர்.

அதுமட்டுமல்ல, அப்பெண்ணின் கருத்தில் உதித்த புரட்சிப் பாடல்கள் பல. எங்கெங்கும் இப்போது பேசு பொருளாய் இருக்கும் மகளிரின் மாத விலக்கு பற்றிப் பேசிய முதல் பெண் அக்காள். தீட்டு என்று மகளிரை விலக்கி வைத்த அந்த மூன்று நாட்களின் அவலத்தைப் பற்றி முந்நூறு ஆண்டுகளுக்கு முன்ரே பேசியுள்ளார் அக்காள்.

“தீட்டென்று சொல்லிசிலதூரம் போய்நிற்கும் மாயைஆட்டி வைக்கும் சூத்திரத்தை அறியார்-பராபரமே
தீட்டு திரண்டுருண்டு சிலைபோல பெண்ணாகி வீட்டில் இருக்க தீட்டோடிப் போச்சோ - பராபரமே”
அக்காள்

என்று கேட்கும் அக்காள் பெண்ணே தீட்டின் மொத்த உருவம். அவர்களை மூன்று நாட்கள் மட்டும் தீட்டு என்று தள்ளி வைப்பது எப்படி? என்று கேள்வி கேட்பதுடன் உயிர்கள் எல்லாம் பெண் இனத்தின் தீட்டில் உருவாவது. ஆண், பெண், மற்றும் உயிர்கள் எல்லாம் திரண்டு வந்த தீட்டின் மொத்த உருவமே என்று திட்டமாக நெற்றிப் பொட்டில் அரைவது போலச் சொல்கிறார். குழந்தை பிறந்து பத்து நாட்கள் தீட்டுக் காப்பதும் பின்பு புன்யாவசனம் என்று ஒன்றைச் செய்து குளிப்பாட்டி வீட்டுக்கு அழைப்பதும் சுகாதாரம் சுத்தம் சார்ந்த அறிவியல் தான். அதையும் சடங்காக்கி விட்ட செயலைக் கண்டிக்கும் அக்காள்,

“காமத் தீட்டுரைந்து கைக்குழந்தையாய் இருந்து
ஆமையைப் போலே முழுக சுத்தி ஆச்சோ - பராபரமே”,

என்று கேட்பது சிந்திக்க வைப்பதோடு கூடுதலாக வியக்கவும் வைக்கிறது. இத்தனைப் புரட்சியான கருத்தை ஒரு பெண் பாடியுள்ளாள். சித்தர்களின் தத்துவங்கள் பொது வெளிக்குக் கிட்டியதைப் போல இவரின் இக்கருத்துகள் மக்களுக்குக் கிட்டாமல் போனது எப்படி என்று.

” சுக்லத்தால் தீட்டுரைந்து தொண்ணூற் றாறுமாகி
எக்குலமும் ஸத்குலமாச்சே - பராபரமே”,

என்று கூறி, பெண்ணைத் தீட்டு என்றால் சக்தி சிவமும் தீட்டுதான். சக்தி சிவம் தீட்டு என்றால் சாஸ்திரம் கோத்திரம் குலம் சாதி எல்லாம் தீட்டுதான். இருட்டில் இருக்கும் மூடர்களே புரிந்து கொள்ளுங்கள் என்கின்றார்.

” சாஸ்திரமாய் கோத்திரமாய் ஜாதி வருணாசிரமமாய் சத்பாத்திரமும் தீட்டல்லவோ அறியாள் - பராபரமே

(7ஆம் பக்கம் பார்க்க..)



# அதிவேகமாக வந்த கார் கூட்டத்தில் புகுந்தது: ஜெர்மனியில் ஒருவர் பலி பலர் காயம்

ஜெர்மனியின் மன்ஹெய்ம் நகரில் அதிவேகமாக பயணித்த கார் மக்கள் கூடும் இடத்தில் புகுந்ததில் ஒருவர் பலியானார்.

ஜெர்மனியில் தற்போது கார்னிவெல் பருவகாலம் என்பதால் நகரின் பெரும்பாலான பகுதிகள் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகின்றன. இந்நிலையில் இந்த சம்பவம் நடந்திருப்பதால் நகரவாசிகள் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாகி இருக்கிறார்கள்.

இந்த சம்பவம் குறித்து பொலிஸ் செய்திதொடர்பாளர் ஸ்டீபன் வில்ஹெல்ம் கூறியதாவது:

மன்ஹெய்ம் நகரின் நடைபாதை தெருவான பாரடேப்ளாட்ஸில், ஒரு கருப்பு நிற எஸ்.யு.வி., காரை ஓட்டி வந்த டிரைவர் அதிவேகமாக வந்து கூட்டத்தின் மீது புகுந்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர். காரை ஓட்டி வந்த டிரைவர் கைது செய்யப்பட்டார். பொதுமக்களிடம் அந்தப் பகுதியைத் தவிர்க்குமாறு காவல்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது. இவ்வாறு ஸ்டீபன் வில்ஹெல்ம் கூறினார். (ஐ)

# அமெரிக்காவில் பரவும் காட்டுத்தீ



*அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகாணத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட காட்டுத்தீ, அருகில் உள்ள பகுதிகளுக்கும் பரவ தொடங்கியுள்ளது. தீயை அணைக்கும் பணியில் 500க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதில் சுமார் 4,000 ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையானது. பாதுகாப்பு கருதி 2,000த்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.*

# பிலிப்பைன்ஸில் அதிகரித்து வரும் வெயிலின் தாக்கத்தால் பள்ளிகள் மூடல்



பிலிப்பைன்ஸில் அதிகரித்து வரும் வெயிலின் தாக்கத்தால் 50-க்கும் மேற்பட்ட பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. வெயில் சுட்டெரிப்பதால் பகல் நேரத்தில் அவசியமின்றி பொதுமக்கள் வெளியே வர வேண்டாம் என அரசு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)



# உக்ரைனுக்கான ராணுவ உதவிகளை நிறுத்தியது அமெரிக்கா

அமெரிக்கா: உக்ரைனுக்கான ராணுவ உதவிகளை நிறுத்துவதாக அமெரிக்க வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. பிரச்னைகளை முடிப்பதற்கு நல்ல தீர்வை எட்ட வேண்டும் என்பதால் ராணுவ உதவிகள் நிறுத்தபட்டுள்ளது. போர் நிறுத்தம் என்ற நோக்கத்தில் உறுதியாக இருக்க வேண்டும் என்பதால் முடிவு எடுத்துள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

# கனடா, சீனாவில் இருந்து வரும் பொருட்களுக்கு 25 சதவீதம் கூடுதல் வரி- ட்ரம்ப் அறிவிப்பு

கனடா, மெக்சிகோ நாடுகளிலிருந்து அமெரிக்காவில் இறக்குமதியாகும் பொருட்களுக்கு, கூடுதலாக 25% வரி இந்திய நேரப்படி இன்று இரவு 10.30 மணிக்கு நடைமுறைக்கு வருகிறது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் கனடா, சீனா கூடுதல் வரி விதித்துள்ளது.

வட அமெரிக்க நாடுகளான கனடா, மெக்சிகோவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு, 25 சதவீதமும், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு, 35 சதவீதமும் வரி விதித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் பதவி ஏற்ற பின் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவு பிப்ரவரி முதல் அமலுக்கு வருவதாகவும் அவர் அறிவித்தார். பின் ஒரு மாதம் அவகாசம் அளிக்கப்பட்டது.



இந்நிலையில், மூன்று நாடுகளுக்குமான வரி விதிப்பு, இன்று (மார்ச் 4) முதல் அமலுக்கு வருவதாக டிரம்ப் அறிவித்துள்ளார். 'மெக்சிகோ மற்றும் கனடாவில் இருந்து அதிக அளவிலான போதைப் பொருட்கள் அமெரிக்காவுக்குள் வருகின்றன. 'இந்த போதை அரக்கனால் அமெரிக்கா தொடர்ந்து பாதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, இந்த போதை வினியோகம் முற்றிலும் நிற்கும் வரை அல்லது தீவிர கட்டுப்பாட்டுக்கு வரும் வரை இந்த வரி விதிப்பு தொடரும்' என டிரம்ப் திட்டவட்டமாக தெரிவித்து உள்ளார்.

இந்த கூடுதல் வரி விதிப்பு இந்திய நேரப்படி இன்று இரவு 10.30 மணிக்கு நடைமுறைக்கு வருகிறது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் கனடா, சீனா கூடுதல் வரி விதித்துள்ளது.

அமெரிக்கா எந்த அளவுக்கு வரி விதித்ததோ அதே அளவுக்கு கனடாவும் அமெரிக்க பொருளுக்கு வரி விதித்து பதிலடி கொடுத்துள்ளது. அமெரிக்க பொருட்களுக்கு சீனா 10 முதல் 15 சதவீதம் வரை வரி விதித்துள்ளது. அமெரிக்காவில் பங்குச் சந்தைகள் இன்று சரிவை சந்தித்துள்ளன.

அமெரிக்கப் பொருட்கள் மீது வரி விதிக்கும் நாடுகள் மீது ஏப்ரல் 2ம் திகதீ முதல் பரஸ்பர வரி அமலுக்கு வரும் என்றும் டிரம்ப் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

(ஐ)

## ஏப்ரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்து வைக்கவுள்ளார். அதேபோல் அனுராதபுரம் ஸ்ரீ மகாபோதிக்குச் சென்று வழிபாடுகளிலும் அவர் ஈடுபடவுள்ளார் என்று அறியமுடிகின்றது.

இந்தியப் பிரதமரின் இலங்கைப் பயணத்தையொட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள இந்தியாவில் இருந்து உயர்மட்ட பாதுகாப்புக் குழு ஒன்று தற்போது கொழும்பு வந்துள்ளது.

முன்னதாக அதானி மின்திட்டம் தொடர்பில் இலங்கையில் சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விஜயத்தின்போது அது தொடர்பில் முக்கியமாக ஆராயப்படும் என்று தெரிகின்றது.

## மதுபான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நெடுந்தீவு மதுபான விற்பனை நிலையத்துக்கு எதிராக அந்தப் பகுதி மக்கள் தொடர்ச்சியாகப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்திருந்தனர்.

நெடுந்தீவில் வடக்கு மாகாண ஆளுநரின் பங்கேற்புடன் நடமாடும் சேவை நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள நிலையில், மக்கள் இன்று மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"சம்பளத்தைப் பொய்யாக உயர்த்தாதே, பதவி வெற்றிடங்களை உடனடியாக நிரப்பு, இடமாற்ற விண்ணப்பங்களுக்கு நடவடிக்கை எடு, பொதுச் சேவைக்கு 64 வீதம், எங்களுக்கு 58 வீதம் நீதியா?, முவு மாற்றாதே, MCA குறைப்பை நிறுத்து போன்ற கோஷங்கள் போராட்டக்காரர்களால் எழுப்பப்பட்டன.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள அரச பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பல்கலைக்கழக ஊழியர்கள் அந்தந்த பல்கலைக்கழகங்களில் ,ன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## யாழ்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கொக்குவில் பகுதியிலுள்ள களஞ்சியசாலை ஒன்றுக்கு மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் களஞ்சியசாலையினுள் இருந்த இளைஞரை வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் கை விரல் துண்டாடப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் இளைஞர் அனுமதிக்கப்பட்ட நிலையில் விரலைப் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வரும் நிலையில் சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாணக்கியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரலாம்" என்றார். அதேபோல், இது ஒரு தேசிய பிரச்சினை அல்ல என்று சபாநாயகர் கூறியதால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவும் திருகோணமலை வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவர் நோயாளர்களை தாக்கிய சம்பவம் தொடர்பில் சபையில் கேள்வி எழுப்ப முற்பட்ட நிலையில் சபாநாயகர் அனுமதி மறுத்திருந்தார்.

இதனையடுத்து, சபையில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், எதிர்க்கட்சித் தலைவர் தலையிட்டு நிலையியல் கட்டளைக்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன மற்றும் அர்ச்சுனாவுக்கு ஒவ்வொரு நிமிடங்களைப் பெற்றுக்கொடுக்குமாறு கோரிய நிலையில் அவர்களுக்கான ஒரு நிமிடம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தமிழரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"தமது கூட்டணியில் தமிழரசுக் கட்சி சேரலாம் எனச் சொன்னார்கள். நாங்கள் ஒற்றுமை கருதி பேசாது இருந்தோம். அதற்காகத் தமிழரசுக் கட்சியை மலினப்படுத்தி கீழ்நிலைப்படுத்த எவராலும் முடியாது. கூட்டணியுடன் கூட்டு வைக்க வேண்டிய தேவை தமிழரசுக் கட்சிக்கு இல்லை. நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படவே விரும்பினோம். அதற்காக நாம் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர்களுடன் பேசி இருக்கின்றோம்.

அதேபோன்று, புளொட் அமைப்பில் இருந்தாலும் சித்தார்த்தன் தமிழரசுக் கட்சிக்காரன். அவரின் பூர்வீகம் தமிழரசுக் கட்சியே. இதை அவரிடம் நேரடியாகவே சொல்லி இருக்கின்றேன். நீங்கள் கட்சியின் நலன் சார்ந்து சிந்திக்க வேண்டும் என்றும் அவரிடம் கூறியிருக்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட நாம் தயார். ஆனால், கட்சிகளின் கூட்டணிகளுக்குள் நாம் செல்லத் தயார் இல்லை." - என்றார்.

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்

குருநாகல், மார்ச் 04

குருநாகல் மாவட்டம், குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக குளியாப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவின் பிடெதனிய பகுதியில் உள்ள தொரப்பிட்டி தோட்டத்தில் அனுமதியின்றி தேங்காய் பறிக்கத் தோட்டத்துக்குள் நுழைந்ததற்காக குறித்த நபரை காவலாளி துப்பாக்கியால் சுட்டுள்ளார். துப்பாக்கிச்சூட்டை நடத்திய மெதிரிகிரிய பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய சந்தேகநபர், துப்பாக்கிச்சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட 12 துளை துப்பாக்கியுடன் குளியாப்பிட்டி பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து அமைச்சரின் கருத்து!

அரசாங்க வைத்திய அதிகாரிகளின் மேலதிக பணிக்கொடுப்பனவு மற்றும் விடுமுறை கொடுப்பனவு குறைப்பு தொடர்பில் எதிர்ப்பு வெளியிட்டு மார்ச் 5 ஆம் திகதி முதல் நாடளாவிய பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் இன்றைய நாடாளுமன்ற அமர்வில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சருமான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ கருத்து வெளியிட்டிருந்தார். அதாவது,

தொழிற்சங்கப் போராட்டம் இல்லாமலேயே, இந்த அரசாங்கம் அனைத்து வைத்தியர்களுக்கும் குறிப்பிடத்தக்க சம்பள உயர்வை அமுல்படுத்தியுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் வைத்தியர்களுக்கு அடிப்படை சம்பளம், விடுமுறை கொடுப்பனவுகள், கூடுதல் நேர கொடுப்பனவுகள் மற்றும் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சுகாதார அமைச்சின் வரவுசெலவுத் திட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி விவாதிக்கப்படும் நேரத்தில் இதுபோன்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இதுபோன்ற நியாயமற்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடாது என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

# வடக்கு ஆளுநரின் தலைமையில் நெடுந்தீவில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 04

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் நடைபெறும் நடமாடும் சேவை நாளை புதன்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 5 அமைச்சுக்களின் செயலாளர்கள், அமைச்சுக்களின் கீழான அனைத்துத் திணைக்களங்களின் தலைவர்களும், அதற்கு மேலதிகமாக மத்திய அரசின் கீழான இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்றொழில் நீரியல்வளங்கள் திணைக்களம், கரையோர பாதுகாப்புத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் பிராந்தியத் திணைக்களத் தலைவர்களும் இந்த நடமாடும் சேவையில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாக சேவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பொதுமக்கள் நடமாடும் சேவையில் கலந்துகொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

# காலத்தை எதிர்த்து....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சக்திசிவமே சராசரமாய் நிற்கையிலே எதுவும்
கர்மமுடருக் கிருட்டாச்சே - பராபரமே",
அக்காள்

என்று அக்காலத்தில் சிந்திக்கவும் முடியாத ஒரு சிந்தனையைச் சிந்தித்ததோடன்றி பதிவும் செய்தவர் அக்காள். தீட்டு பற்றிய அக்காளின் கருத்து இக்காலத்தவர் கண்டிப்பாகப் படித்து உணர வேண்டியது.

அக்காள் காரைக்கால் அம்மையாரைப் போலத் தல யாத்திரை செய்தார். காரைக்கால் அம்மையார் கைலாய மலையில் ஏறியது போல அக்காள் குற்றால மலையில் ஏறினார். காரைக்காலம்மையார் கைகளால் ஏற அக்காள் கால்களால் ஏறினார். காரைக்காலம்மையார் அங்கிருந்து திரு ஆலங்காடு வந்து இறையடியில் ஐக்கியமானார் என்பர். அக்காள் பொதிய மலையிலிருந்து இறங்கவே இல்லை. இது அவர் வாழ்க்கை வரலாறு.

தமிழகத்தில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு அடுப்பங்கரையும் பத்துப் பாத்திரங்களும் கதி என்று இருக்க வேண்டிய காலத்துப் பெண் அதிலும் ஒரு விதவைப் பெண் காலத்தை எதிர்த்துக் கரையேறி வந்தாள் அவள். அவள் வந்தாள் என்பதில் என்ன பெருமை இருக்கிறது. அவள் தம் ஞானப் பாடல்களால் ஆண்கள் பலரையும் பின்பற்றும் படி செய்தாள் என்பதல்லவோ பெருமை. வள்ளலாரின் வெண்ணிலா கண்ணி, சிந்து முதலான பாடல்கள் அக்காளின் பாடல்களின் சாயலை அடியொற்றி உள்ளன என்பதை அருட்பா பாடல்களைப் படித்தவர்களால் நன்கு உணர முடியும்.

மகாகவி பாரதி இவரது பாணியில் பல ஞானப் பாடல்களை எழுதியுள்ளார். பாரதியாருக்கு இவரது கவிதைகளின் மீது ஈர்ப்பு இருந்திருக்கிறது என்று பாரதியாரின் மனைவி செல்லம்மாளின் சகோதரி மகள். கோமதி ராஜாங்கம் கூறுவதை உறுதிப் படுத்துகிறது பாரதியாரின் பல பாடல்கள். பகவான் ரமண மகரிஷியின் முன்னிலையில் ஆவுடையக்காளின் பாடல்களைப் பாடுவது வழக்கமாக இருந்திருக்கிறது. இவரது பாடல்களைப் பெண்கள் திருமணச் சடங்குகளிலும் மகிழ்ச்சியான பிற தருணங்களிலும் பாடுவது மரபு.

நித்யானந்தகிரி சுவாமிகள் தொகுத்துள்ள 'செங்கோட்டை ஸ்ரீ ஆவுடையக்காள் பாடல் திரட்டு' என்னும் அக்காளின் பாடல்களின் தொகுப்பு நூலில் அணிந்துரை எழுதிய ஸ்ரீஹரி (கிருஷ்ணப்ரேமி அண்ணா) "முக்யம், பெண்கள் கூட உபநிஷத்துப் படிக்காமலேயே ஞானம் பெற இது சுலபமான வழி" என்று எழுதுகின்றார். பெண்கள் கூட என்னும் இவ்விரு சொற்கள் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டி உள்ளது. இன்னும் ஒரு முக்கியக் குறிப்பு இச்சொல்லில் கிடைக்கிறது. அது ஒரு புறமிருக்க, பெண்கள் கூட என்று எழுதுவதால், ஆண்கள் ஞானம் பெற வேண்டிய கருத்துகள் அமைந்த ஞானப்பாடல்களைத் தந்துள்ளார் ஆவுடையக்காள் என்று கிருஷ்ணப் பிரேமி சொல்லாமல் சொல்வது விளங்குகிறது.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு, அன்றைக்கு உள்ள சமுதாயச் சூழலில் ஆண்களும் பின்பற்றும் வகையில் புரட்சிகரமான கருத்துக்களைக் கொடுத்து ஞான உலகின் உச்சியை அடைந்துள்ளார் ஒரு விதவைப் பெண். இந்த இருபத்தியோராம் நூற்றாண்டின் பேசு பொருள்களாக உள்ள சாதி, சமயம், ஆண்- பெண் பேதம், தீட்டு இவை பற்றி எல்லாம் அன்றே பேசிய புரட்சிப்பெண் ஆவுடையக்காள், காலத்தை எதிர்த்துப் போராடி தமக்கென ஒரு தனிப்பாதையை, வகுத்துக் கொண்டு தம் பெயரை நிலை நிறுத்திய முதல் கைம்பெண், "ஞானம் வந்த மாத்திரத்தில் தேகம் விழுமானால் அஞ்ஞான ஜனங்களுக்கு யாராலே விமோசனமாம்?" என்று கேள்வி கேட்கும் செங்கோட்டை ஆவுடையக்காள்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.03.2025 இல் வெளியிடப்பெற்றது.